**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண்.116/2021**
**நாள் 16/07/2024, செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரா் தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - யமா சுசிலம்மா | க/பெயர் - யம ஏசய்யா |
| வயது - 78 | தொழில் - |
| விலாசம் - எண் 62, கிருஜ்ணாபுரம் கிராமம், பொன்னேரி. | |

**முதல் விசாரணை** **(PW1)**

நான் இந்த மனுவின் மனுதாரா் ஆவேன். 1ம் எதிா்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1, 2 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக ஏற்கனவே கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சாஆ.1 முதல் ம.சா.ஆ. 12 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

1. (1). முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,
   (2). பதிவு புத்தகம் நகல் (லாரி) **ம.சா ஆ 2** ஆகவும்,
   (3). பதிவு புத்தகம் நகல் (கார்) **ம.சா ஆ 3** ஆகவும்,
   (4). காப்பீட்டு பாலிசி நகல் (லாரி) **ம.சா ஆ 4** ஆகவும்,
   (5). காப்பீட்டு பாலிசி நகல் (கார்) **ம.சா ஆ 5** ஆகவும்,
   (6). ஓட்டுநர் உரிம நகல் (லாரி) **ம.சா ஆ 6** ஆகவும்,
   (7). ஓட்டுநர் உரிம நகல் (கார்) **ம.சா ஆ 7** ஆகவும்,
   (8). மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் (லாரி) **ம.சா ஆ 8** ஆகவும்,
   (9). மருத்துவ விடுப்பின் சுருக்கம் அசல் **ம.சா ஆ 9** ஆகவும்,
   (10). மருத்துவ செலவு ரசீதுகள் அசல் **ம.சா ஆ 10** ஆகவும்,

(11). Police Intimation நகல் **ம.சா ஆ 11** ஆகவும்,

(12). ஆதார் அட்டை நகல் **ம.சா ஆ 12** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**3ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் தேதி, வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்தது. எந்த இடத்தில் விபத்து நடந்தது என்றால் வீரம்பள்ளி குறுக்கு சாலை அருகில் நசரத்பேட்டையில் நடந்தது. நான் காரில் சென்று கொண்டுருந்தபோது விபத்து நடந்தது. காரில் நான்கு பேர் பயணம் செய்தோம். காரில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த லாரி எங்கள் கார் மீது மோதியது. விபத்தில் எனக்கு எங்கே அடிபட்டது என்றால் இடது காலில் எலும்பு முறிவு ஏற்ப்பட்டது மற்றும் இடது கையில் மாவு கட்டு போடப்பட்டது. நெல்லூரில் உள்ள மெடிக்கவர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவமனையில் 1 மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் தாக்கல் செய்த பிரமான வாக்குமூலத்தில் 12.01.2021 முதல் 27.01.2021 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் கார் மீது மோதிய லாரியின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தின் போது எனக்கு என்ன வயது என்றால் 78 இருக்கும். விபத்தின் போது நான் ஏதேனும் வேலை செய்திருந்தேனா என்றால் இல்லை. விபத்து குறித்து யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் எனது மகன் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. மருத்துவ சிகிச்சைக்காக ரூபாய் 8 லட்சம் செலவு செய்துள்ளேன். என்கூற்றின் படி நான் சென்று கொண்டிருந்த காரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் தான் விபத்து ஏற்ப்பட்டது. நான் சென்று கொண்டிருந்த காரின் ஓட்டுநரின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் அதிவேகத்தாலும் தான் விபத்து நடந்தது என்றும் லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாலும் விபத்து ஏற்ப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு இழப்பீடு கோரவேண்டும் என்றால் முதல் மற்றும் 2ம் எதிர் மனுதாரிடம் தான் இழப்பீடு கோரவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**